**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01/2018** P.W. 19

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. பழனிச்சாமி | Father's Name. | |
| Village | : | Taluk : | |
| Caste | : | Calling: | |
| Religion | : | Age : | |
| Date | : 25.08.2022 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 25.08.2022

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்சமயம் நாகப்பட்டினம் மாவட்ட குற்ற புலனாய்வுத்துறை ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். நான் கடந்த 03.08.2016 ம் தேதி வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் ராஜேஷ் அன்றைய தினம் காலை 10 மணிக்கு நாகப்பட்டினம் மாவட்ட காவல் அலுவலக நமூணா CN.No.C1/7858/2016 ன் படி Proceedings of ADGP ( Land O ) Chennai Rc.No.515/060598/Crime 3 (2)2016 Date 27.04.2016 ன் மூலம் தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்திலிருந்து மாறுதலில் வரப்பட்ட தெற்கு காவல் நிலைய குற்ற எண் 380/2016 ச/பிரிவு 363 இதச வழக்கின் முதல் முதல் தகவல் அறிக்கையை பெற்று வேளாங்கண்ணி காவல் நிலைய குற்ற எண்206/2016 சட்ட பிரிவு 363 இதச படி மாறுதல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்திருந்ததை பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரிவரைபடம் அதசாஆ.9 ஆகும். அன்றைய தினமே வழக்கு சாட்சிகள் ஷீலா, அல்போன்சா, ராஜா, தேவேந்திரன் ஆகியோர்களை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையத்திற்கும் குழந்தை காணாமல் போனது பற்றி விளம்பரம் கொடுத்து அறிவிப்பு பலகையில் ஒட்ட செய்தேன். நாகப்பட்டினம் மாவட்டத்தில உள்ள லோக்கல் கேபிள் டி வியில் அறிவிப்பு கொடுத்தோம். சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரகாசன் தலைமையில் ஒரு தனிப்படை அமைத்து குழந்தையை தேவந்தோம். அதன் பிறகு 5.8.2016 ல் ஜெயந்தி, சுகன்யா, பாண்டியன் மற்றும் மகாலெட்சுமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர் 9.8.2016 ம் தேதி நிர்மளா அன்பு இல்லம் அருள்மேரி என்பவரையும் கிருஷ்துராஜா கருணை இல்லம் மேரி என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நாகப்பட்டினம் ஆதரவற்ற குழந்தைகள் காப்பம் நிர்வாகி ஜெயராஜ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர் 23.09.2016 ம் தேதி மாநில சட்டம் ஒழுங்கு காவல்துறை உதவி இயக்குனர் அவர்களின் உத்தரவுபடி நாகப்பட்டினம் சிபிசிஜடி பொது நமூணா நாள் 23.09.2016 மற்றும் மதுரை உயர் நீதிமன்ற HCP990/2016, நாள் 18.08.2016 ன் படியும் வழக்கு கோப்பில் 1 முதல் 112 பக்கம் வரை சிபிசிஜடி காவல் நிலையத்திற்கு 23.09.2016 ந் தேதிஅனுப்பிவைத்தேன். மாவட்ட காவல் நிலைய கண்காணிப்பாளர் நமூணா எண் சி1 155/93/2016, நாள் 04.09.2016 உத்தரவு வழக்கு கோப்பை சிபிசிஜடி வசம் ஒப்படைக்க கொடுக்கப்பட்டது. அதன் படி ஒப்படைத்தேன். சிபிசிஜடி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு எத்தனை நாள் கழித்து நீதிமன்றத்திற்கு அனுப்பட்டது என்று எனக்கு தேதி ஞாபகம் இல்லை. வழக்கில் காலதாமதத்தை மறைப்பதற்காக ஞாபகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எப்படியாவது இந்த வழக்கில் எதிரிகளை சேர்க்கவேண்டும்

என்பதற்காக காலதாமதமாக முதல் தகல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டு அந்த விபரத்தை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிய பிறகு எல்லா காவல் நிலையத்திற்கும் கேபிள் டிவிக்கும் விளம்பரம் கொடுக்கப்படதா அல்லது அதற்கு முன்பாக விளம்பரம் கொடுக்கப்பட்டதா என்றால் முதல் தகவல் அறிக்கை அனுப்பியபிறகு கொடுக்கப்பட்டது. நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பியபிறகு நீதிமன்றத்தில் அனுமதி பெறாமல் விளம்பரம் செய்தது தவறு என்றால் சரியல்ல. தனிப்படை தேடுவதற்காக மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில்தான் செய்யமுடியும் நான் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் புலன் விசாரணை அதிகாரி என்பதால் என்னுடைய அதிகாரத்தின்படி செய்யமுடியும். மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. சிபிசிஐடி ஆய்வாளர் என்னை விசாரித்தார். தனிப்படை அமைத்த விபரம் குறித்தும் அது எஸ்பிக்கு சொல்லப்பட்ட விபரம் குறித்தும் சொல்லவில்லை. உண்மையிலேயே தனிப்படை அமைத்திருந்தால் மேற்படி விபரங்கள் குறித்து சிபிசிஐடி ஆய்வளாரிடம் சொல்லியிருந்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ளவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் யாரும் வசிக்கவில்லை. அந்த இடம் பக்தர்கள் வந்து படுத்து தூங்கும் இடமாகும். அந்த இடத்தில் தொடர்ச்சியாக வீடுகள், கடைகள் இருக்கிறது என்றும் கோயில் நிர்வாகத்தில் வேலை செய்பவர்கள் இருப்பார்கள் என்றும் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பார்வை மகசர் சாட்சிகள் காவல் நிலையத்தின் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. நான் விசாரித்த சாட்சிகள்தான் குழந்தைகள் இல்ல நிர்வாகிகள் என்பதை காட்டுவதற்கு எந்த ஆதாரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மதுரை உயர்நீதிமன்ற கிளை உத்தரவின்பேரில்தான் ADGP உத்தரவின் பேரில்

**C.C.01/2018** P.W. 19

எங்கள் மாவட்ட கண்காணிப்பாளர் எங்களுக்கு கொடுத்த உத்தரவின் அடிப்படையில் வழக்கு கோப்பை சிபிசிஐடிக்கு மாற்றி அனுப்பிவைத்தோம். எந்தவித முதல் நிலை முகாந்திர விசாரணையும் இன்னி இயந்திரகதியில் முதல் தகல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவசரகதியில் தவறான முறையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் தவறாக விசாரணை செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த வழக்கு கோப்பை சிபிசிஐடி காவல் துறையினர் வசம் ஒப்படைத்தோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**